31st October 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : மாணவர்கள் இதில் பயிற்சி பெற ஒரு ஏற்பாடும் செய்யவில்லை. ஆனால் முதன் முதலாக நாடகக் கலையில் பயிற்சி பெற சங்கீத நாடக சங்கத்தின் கீழ் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு, மூன்றறை மாதம் முடிவடைந்து அதன் கழிந்த . விழாவிலும் கலந்து கொள்ள எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அது தொடர்ந்து நடக்கும்.

Dental Hospital Van.

*** 44 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government are using for medical purposes the dental moving hospital van donated by Czeachoslovakia, in 1956 ?**

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir.

SRI N. K. PALANISAMI : அதில் 20 டாக்டர்கள் வருஷம் ஒன்றுக்கு பரீட்சை பாஸ் பண்ண வேண்டுமென்று விதியிருக்கிறது. அப்படியானால் அந்த டெண்டல் ஸர்ஜரி காரை ஓட்டுவதற்கு ஆள் சேரவில்லை என்று சொல்லப்படுகிறது வாஸ்தவந்தானா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அங்கத்தினர் அவர்கள் எப்போதோ அந்த வானை பார்த்துவிட்டுச் சொல்கிறார்கள். இப்பொழுது அது செங்கல்பட்டில் சுற்றிக் கொண்டிருக்கிறது. அநேக கிராமங்களுக்குப் போய்க்கொண்டிருக்கிறது.

Textile Mills.

*** 45 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of spindles permitted to be installed in textile mills in 1957 ?**

THE HON. SRI R. VENKATARAMAN : In 1957, the Government of India have so far issued licences for the installation of 28,624 spindles in the Madras State. No information regarding the licences issued for the installation of spindles in the whole of India is available with this Government.

SRI N. K. PALANISAMI : இப்பொழுது இருக்கக்கூடிய ஸ்பின்டில்ஸைவிட அதிகம் கொடுக்க உத்தேசமா ? அல்லது இப்படியே நிறுத்தப் போகிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இண்டஸ்ட்ரீஸ் கண்ட்ரோல் அன்ட் டெவலெப்மென்ட் ரெகுலேஷன் ஆக்ட் பிரகாரம் ஸ்பின்டில்கள் கொடுக்க வேண்டியதின் பொறுப்பு மத்திய சர்க்காருடையதாகும். மாகாணத்தில் புது தறிகள் வைக்க முன் வந்தால் மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்யப்படும்.

SRI V. SANKARAN : மதுரையில் எந்தெந்த மில்களுக்கு எவ்வளவு எவ்வளவு ஸ்பின்டில்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தக் கேள்வி புதிதாக கொடுக்கப்பட்ட ஸ்பின்டில்களை-ஐக் குறித்தது. ருக்மணி மில்ஸ், லிமிடெட், மதுரைக்கு 12,000 கதிர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : அதிகப்படியாக நூற்கும் கதிர்களை மட்டும் அதிகரித்துக்கொண்டு போகிறார்கள். நம் ராஜ்யத்தில் கைத்தறிக்குத் தேவையான நூலை அதிகரிக்க அதற்கு சமமாக தறிகளையும், விசைத்தறிகளையும் அதிகப்படுத்தப் போகிறார்களா ?